# சமூகவலைத்தளச் சூழலில் தமிழ் இளைஞர்களின் இலக்கியப் படைப்பு முயற்சிகள்

**வி.விமலாதித்தன், அ.சம்பந்தன்**

v.vimalathithan@gmail.com

**சுருக்கம்:** நவீனத் தமிழிலக்கியச் சூழலில் இயங்கிவரும் இளையதலைமுறையின் பங்களிப்பானது, தொழினுட்ப வளர்ச்சிக்கு மத்தியில், பண்பாட்டு அடையாளங்களின் இருப்பிற்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது. ஒருவரை ஒருவர் எளிதாக அணுகக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்ற இச்சூழலானது படைப்புக்கள் மீதான எதிர்வினைகளை உடனுக்குடன் படைப்பாளிகளிடம் கொண்டு செல்லக்கூடியவாறு உள்ளது. புவியியற் சூழலைச் சார்ந்த உணர்வுகள், அரசியற் கொள்கைகள், சமூகக் கொள்கைகள் ஆகியவற்றுக்கான பிரசாரச் சாதனமாகவும் படைப்புகள் சமூகவலைத்தளச்சூழலில் வெளிப்படுகின்றன. இலக்கியப்பரிசோதனை முயற்சிகளுக்கான சிறந்த ஆய்வுகூடங்களாக சமூகவலைத்தளங்கள் திகழ்கின்றன. சமூகலைத்தள வெளியில், பதியப்படும் படைப்புகள் காணாமற் போய்விடும் துயரம் பல படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு நேர்ந்திருக்கின்றன. இவ்வாய்வு சமூக வலைத்தளங்களினூடான படைப்பு முயற்சிகளை ஆராய்கின்றது சமூகவலைத்தளங்களின் குறிப்புகள் மற்றும் நிலைச்செய்திகள் ஆராயப்படும். பின்னர் சமூகவலைத்தளங்களினூடாக நேர்காணலில் ஈடுபடும் இளைஞர்களினுடன் நேர்காணல் நடாத்தி தேவையான விபரங்கள் பெறப்படும். இன்றைய காலத்தின் போக்கில் சமூகவலைத்தள வெளிக்குள்ளான தமிழ் இளைஞர்களின் இலக்கியப் படைப்பு மற்றும் பகிர்வுகளின் போக்கு குறித்த கற்கையை ஆய்வுரீதியாக இக்கட்டுரை முன்வைக்கும்.